JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 56/2026 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | பிரபாகரன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஏசி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உடன்பிறந்த அண்ணன். அசா.1 கருப்பம்மாள் என் அம்மா, சாட்சி பரமசிவன் என் அப்பா. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 4 மாதங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் குடும்பபிரச்சினை ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை. நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.11.2025 ம் தேதியன்று

22.00 மணியளவில் ஆஜர் எதிரி குடும்ப பிரச்சினை காரணமாக என்னை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, என்னை அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல, எதிரி மீது நடவடிக்கை எடுக்க அங்கு வந்த போலிசாரிடம் நான் மயக்க நிலையில் இருந்ததால் என் அம்மா புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும் ஆஜர் எதிரி என் உடன்பிறந்த சகோதரர் என்பதாலும் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 56/2026 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | கருப்பம்மாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் மகன். சாட்சி பிரபாகரன் என் இளைய மகன், சாட்சி பரமசிவன் என் கணவர். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 4 மாதங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் குடும்பபிரச்சினை ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கைரேகை வைத்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.11.2025 ம் தேதியன்று 22.00 மணியளவில் ஆஜர் எதிரி குடும்ப பிரச்சினை காரணமாக பட்டியல் சாட்சி இரண்டு பிரபாகரனை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, பிரபாகரனை அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. பிரபாகரனுக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரபாகரனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல, எதிரி மீது நடவடிக்கை எடுக்க அங்கு வந்த போலிசாரிடம் பிரபாகரன் மயக்க நிலையில் இருந்ததால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும் ஆஜர் எதிரி என் மகன் என்பதாலும் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi